# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 114/ந/2024
நாள் 29.04.2025

திரு.V.பழனிவேலு,
மயிலாடுதுறை, மயிலாடுதுறை மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
மயிலாடுதுறை நகராட்சி, மயிலாடுதுறை மாவட்டம் – எதிர்மனுதாரர்

மயிலாடுதுறை மாவட்டம், கொறநாடு, திருமஞ்சனவீதி, கதவு எண்.48 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.V.பழனிவேலு என்பவரின் 27.03.2023 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.03.2023 அன்று பெறப்பட்டு, 114/ந/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மயிலாடுதுறை மாவட்டம், கொறநாடு, திருமஞ்சனவீதி, கதவு எண்.48 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. பழனிவேலு என்பவர் தனது 27.03.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"நகராட்சி சொத்து வரி விதிப்பு எண்.097/18325 பாதாள சாக்கடை வரிவிதிப்பு எண்.097/008/90021. நான் மூத்த குடிமகன், நான் தமிழ்நாடு அரசு அனைத்துறை அரசு ஓய்வூதியர்கள் சங்கத்தின் மயிலாடுதுறை மாவட்ட செயலாளராகவும் இருக்கிறேன். நகராட்சிக்கு நானும் எனது சங்கத்தைச் சார்ந்தவர்களும் வரி செலுத்துவதால் அரசு நிதி மற்றும் நகராட்சி வரிப்பணம் முறையாக பயன்படுத்தப்படுகிறதா என்பதை அறியும் உரிமை உள்ளது.

மயிலாடுதுறை நகராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை பரிசீலனை செய்ததில் கடந்த 24.01.2022 அன்று நகர்மன்றத்தில் 57 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நகர்மன்ற கூட்ட அறிவிப்பின்படி நகர்மன்றம் 24.01.2022 அன்று பிற்பகல் 05.00 மணிக்கு துவங்கப்பட்டுள்ளது. மேற்படி 57 தீர்மானங்களில் 24 தீர்மானங்கள், பணி ஒப்பந்தங்கள் ஆகும். ஒரே நாளில் பிற்பகல் 05.00 மணிக்கு

துவங்கிய மன்றக் கூட்டம் (தனி அலுவலர் மட்டுமே) இரவு 12.00 மணிக்குள் அதே தேதியில் 24 பணி ஒப்பந்தங்கள் முறைகேடாக ஏற்கப்பட்டுள்ளது என்பது தெரிய வந்தது. நகராட்சி ஆணையரால் பல்வேறு தீர்மானங்களில் முறைகேடுகள் இருந்தது குறித்து 22.11.2022–ல் விரிவான புகார் தமிழ்நாடு அரசு தலைமைச்செயலாளர் அவர்களுக்கும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநருக்கும் அனுப்பப்பட்டது.

மேலும், ஊரக உள்ளாட்சித் தேர்தல் முறையான அறிவிக்கை வெளியிடப்படும் விபரம் தெரிந்து அறிவிக்கை வெளியிடுவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக ஒப்பந்தப் புள்ளிகளுக்கான ஒப்பந்தங்கள் ஏற்கப்பட்டுள்ளது முறைகேடானது என்பதால், தமிழ்நாடு தேர்தல் ஆணையருக்கும் 22.11.22–ல் புகார் அளிக்கப்பட்டது. மேற்படி புகாரில் பல முறைகேடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் தற்போது இந்த புகாரில் பணி ஒப்பந்தங்கள் ஏற்கப்பட்டது மட்டுமே (ஒரே பொருளாக இருக்க வேண்டும் என்பதற்காக) ஒப்பந்தம் பற்றிய புகார் மட்டுமே வலியுறுத்தப்படுகிறது.

மேற்கண்ட புகார் குறித்து தலைமைச்செயலாளர் அவர்கள் எந்த நடவடிக்கை எடுக்கவும், எடுத்ததாக தகவல் கொடுக்கவில்லை. மாநில தேர்தல் ஆணையம் கடிதம் எண்.9507/ந.தே.1/2022 நாள்.29.11.2022–ல் புகார் மனுவினை நகராட்சியின் நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைத்துள்ளார். ஆனால் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை, துணைக் கண்காணிப்பாளர் அவரது கடிதம் எண். 146097/2022 நாள் 05.12.2022–ல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் மன்றத்தில் புகார் செய்து கொள்ளலாம் என்று தெரிவித்து புகாரை திரும்ப அனுப்பி வைத்துள்ளார். எனவே இந்த புகார் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் முன்பாக சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்நிலையில் நாகப்பட்டினம் உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி இயக்குநர் ஆய்வு மேற்கொண்டு கடித எண்.ந.க.397/அ1/2022 நாள்.02.12.2022–ல் அறிக்கை ஒன்றினை எனக்கு அனுப்பி வைத்துள்ளார். அவரது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீர்மான எண்.1220/24.01.2022 பொருள் 17–ன் படி 8 பணிகளுக்கான ஒப்பந்த புள்ளியில் 144.00 லட்சம் மதிப்புடைய 8 பணிகளுக்கான ஒப்பந்த புள்ளிகளும் திருவாளர் வெர்சடைல் என்சினியரிங் சர்வீஸஸ் மயிலாடுதுறை என்ற நிறுவனத்திற்கு இறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி விலை வீதங்கள் ஒப்பு நோக்கப்பட்டு, குறைந்தவிலை வீதம் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டது. இந்த விபரங்கள் சரிபார்க்கப்பட்டது. இதேபோல் தீர்மானம் எண்.1231/24.01.2022–ல் 10 ஒப்பந்தங்களும் மேற்கண்டவாறு முறையாக ஒப்பந்தம் ஏற்கப்பட்டதாக உதவி இயக்குநர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்பட்டதில் காணப்பட்ட விதிமீறல்கள் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தும், அதற்கான விளக்கம் ஏதும் இல்லாமல் ஒப்பந்தம் யாவும் விதிகளின்படி நடைபெற்றுள்ளதாக உதவி இயக்குநர் தணிக்கை அறிக்கையில் தெரிவித்துள்ளது விதிகளை மீறி பணி ஒப்பந்தங்கள் ஏற்கப்பட்டதை மறைத்து தணிக்கை அறிக்கை அனுப்பியுள்ளதால் உதவி இயக்குநரும் இந்த முறைகேடுகளுக்கு உடந்தையாக இருந்ததாக கருதப்படுகிறது. பணி ஒப்பந்தங்கள் ஏற்கப்பட்டதில் உள்ள விதிமீறல்கள் முறைகேடுகள் விபரம் பின்வருமாறு:

1. 24.01.2022–ல் மேற்கண்ட ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்ட அதே தேதியில் தீர்மான எண்.1225/24.01.2022–ன்படி உள்ளாட்சி தேர்தலுக்கு வாக்குச்சாவடிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளுக்கான ஒப்பந்தமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தில்

12.01.2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (12.01.2022க்கு பதிலாக 12.01.2021–ல் என்று பதியப்பட்டுள்ளதாக கருதப்படுகிறது) எனவே நகர்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் விபரம் 12.01.2022ல் முன்னரே தெரிந்துதான் உள்நோக்கத்துடன், சுய லாபத்திற்காக பணி ஒப்பந்தப்புள்ளி 21.01.2022–ல் கோரப்பட்டு 24.01.2022–ல் அவசர அவசரமாக ஒப்பந்தங்கள் ஏற்கப்பட்டுள்ளது.

2. மேலும் நகர்புற உள்ளாட்சித் தேர்தல் ஜனவரியில் நடைபெறும் என்று 28.09.2021–ல் செய்தித்தாள்களில் தகவல் வெளியாகியுள்ளது. தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின் செய்தி வெளியீடு எண்.3/2022–ல் 19.01.2022–ல் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக் கூட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே நகர்புற உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ளதென்பது தெரிந்தே பணி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு முறையான அறிவிக்கை வெளியிடுவதற்கு 2 நாட்கள் முன்னதாக ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்பட்டுள்ளது.'

3. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000–ன் விதி 20–ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்க குறைந்த பட்சம் பதினைந்து நாட்கள் அவகாசம் அளிக்கப்பட வேண்டும். புகாருக்கு உட்பட்ட தீர்மானங்கள் யாவும் கீழ்க்கண்டவாறு மேற்கண்ட விதிக்கு புறம்பாக ஏற்கப்பட்டுள்ளது.

| வரிசை எண். | தீர்மான எண் | மொத்த பணிகள் | ஒப்பந்தபுள்ளி கோரப்பட்ட தேதி | ஒப்பந்தபுள்ளி ஏற்கப்பட்ட நாள் | இடைவெளி |
|---|---|---|---|---|---|
| 1. | 1231 | 10 | 21.01.2022 | 24.01.2022 | மூன்று நாட்கள் |
| 2. | 1206 | 1 | 16.12.2021 | 24.01.2022 | 39 நாட்கள் |
| 3. | 1225 | 3 | 12.01.2021 | 24.01.2022 | 1 வருடம் 12 நாள் |
| 4. | 1215 | 4 | 03.01.2021 | 24.01.2022 | 1 வருடம் 21 நாள் |
| 5. | 1219 | 1 | 11.01.2022 | 24.01.2022 | 13 நாட்கள் |
| 6. | 1220 | 5 | 21.01.2022 | 24.01.2022 | மூன்று நாட்கள் |
| | மொத்தம் | 24 | | | |

4. ஆணையரின் அறிவிக்கையின்படி 24.01.2022 அன்று பிற்பகல் 5.00 மணிக்கு மன்றக்கூட்டம் (தனி அலுவலர்) துவங்கியுள்ளது. 7 மணி நேரத்தில் மொத்தம் 57 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சராசரியாக 7 நிமிடத்திற்கு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

5. மேற்கண்ட விபரத்தின்படி 15 பணி ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 3 நாட்களுக்குள் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு ஏற்கப்பட்டுள்ளது. எனவே தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதிகள் 2000–ன் விதி 20 அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது.

6. இதேமாதிரி ஒப்பந்த விதிகள் மீறப்பட்டது தொடர்பான வழக்கில் சென்னைஉயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P. 13481/2021 நாள்29.10.2021–ல் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

> "The respondent authority have not scrupulously complied with the mandatory provisions of rules 11(2) and 20 of the rules on this ground alone the entire tender process is liable to be quashed"

மேற்கண்ட அடிப்படையில் 2 ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

7. மேற்கண்ட தீர்மானம் எண்.1231/24.01.2022, 1220/24.01.2022–ன்படி 15 ஒப்பந்த பணிகள் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 24.01.2022–ல் மன்றம் எதுவும் கிடையாது. மன்றத்தின் பணி தனி அலுவலர் என்ற முறையில் ஆணையர்தான் செயல்பட்டுள்ளார். பணி ஒப்பந்தம் யாரால் வழங்கப்பட்டது என்ற விபரம் இல்லை. மேற்கண்ட தீர்மானங்களில் எந்த ஒரு பணியும் அவசரம் கிடையாது. உதவி இயக்குநரின் அறிக்கையின்படி பெரும்பாலான பணிகள் ஒரு ஆண்டுக்கு பின்னரும் முடிவுறவில்லை என்ற நிலையில் பணியின் அவசரம் கருதி வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளதாக பதிவு செய்துள்ளது சுயநலனுக்காக எடுத்த நடவடிக்கை ஆகும்.

8. 24.01.2022 அன்று பிற்பகல் 5.00 மணிக்கு மன்றப்பணி துவங்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதிகள் 2000–ன்படி விதி 22, 23, 24–ல் ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலனை செய்து இறுதி செய்ய நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது. இந்த நெறிமுறைகள் பின்பற்றவேண்டுமானால் குறைந்தபட்சம் ஒரு பணி ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய அரை மணி நேரமாகும். ஆனால் ஐந்து நிமிடங்களுக்குள் எவ்வாறு சாத்தியமானது என்று தெரியவில்லை.

9. ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்ட பின்னர் முத்திரைத்தாளில் ஒப்பந்த ஆவணம் எழுதப்பட வேண்டும். எத்தனை மணிக்கு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது. எத்தனை மணிக்கு மன்றக்கூட்டம் நிறைவுற்றது. எத்தனை மணிக்கு முத்திரைத்தாள் யாரிடம் வாங்கப்பட்டது. எத்தனை மணிக்கு காப்பீட்டுத்தொகை செக்யூரிட்டி டெபாசிட் செய்யப்பட்டது என்ற தகவல்கள் எதுவும் இல்லை. தகவல்கள் கோரி, நாகப்பட்டினம் உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி இயக்குநருக்கு 02.01.2023–ல் கடிதம் அனுப்பப்பட்டது. அவர் இதற்கான விபரங்களை இதுவரை அளிக்கவில்லை.

10. மேற்படி 2 தீர்மானங்களில் அடங்கிய 9 பணி ஒப்பந்தங்கள் ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்டவை ஆகும். அரசாணை எண்.243 நி.து. 21.08.2017–ன்படி All Editions in Tamil Nadu செய்தித்தாள்களில் தமிழ்நாடு செய்தி மற்றும் பொதுமக்கள் தொடர்பு துறை மூலம் விளம்பரம் செய்ததற்கான விபரங்கள் கிடைக்கவில்லை.

11. தீர்மானம் எண்.1231/24.01.2022–ல் வரிசை எண்.1, 3, 7, 8, 9, 10 ஆகியவைகளில் குறிப்பிட்ட இரண்டு ஒப்பந்ததாரர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள். (1) Versatile Engg. Ltd. (2) K. Mayilvakanan அதே போல் வரிசை எண்.3, 4, 5 ஆகியவைகளில் (1) உத்திராபதி (2) சசிராணி ஆகிய இருவர் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள். அதேபோல் தீர்மானம் எண்.1220/24.01.2022–ல் வரிசை எண்.1, 2, 3, 4, 6, 8 ஆகியவைகளுக்கு (1) M/s.Versattile Engg.Ltd. (2) K.Mayilvakanan ஆகிய இருவர் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள். மேற்கண்ட விபரங்களின்படி இரண்டே நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள். இருவருக்கும் இடையே Confliet of Interest இருப்பதாக தெளிவாக தெரிகிறது. ஒருவருக்கொருவர் உடன்பாடுடன் கூட்டு சேர்ந்து ஒப்பந்தப்புள்ளிகளை நிர்ணயம் செய்து ஒப்பந்தத்தை பெற்றுள்ளார்கள். இது முறைகேடாகும்.

<u>கோரும் பரிகாரம்.</u>

1. தமிழ்நாடு ஒளிமறைவற்ற ஒப்பந்த விதிகள் 2000–ன் விதிகள் மீறப்பட்டு சுய லாபத்திற்காக நகராட்சி ஆணையர், செயல்பட்ட வகையில் இ.த.ச.420 (ஏமாற்றுதல்) மற்றும் இ.த.ச.409 (நம்பிக்கை மோசடி) ஆகிய குற்றச் செயல்கள் புரிந்துள்ளார் என்பதால் தகுந்த விசாரணை அமைப்பான குற்றப்புலனாய்வு (Crime Branch) மூலம் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளவும்.

நகர்புற உள்ளாட்சித் தேர்தல் நடைபெறும் விபரம் முன்னரே தெரிந்திருந்தபோதிலும் விதிகளை மீறி ஒப்பந்த அறிவிப்பு வெளியிட்டும், ஒப்பந்த நடைமுறைகளை பின்பற்றாமல் வேலை உத்திரவு வழங்கியதன் காரணமாக பணியில் அசிரத்தையாகவும் செயல்பட்டுள்ளதால், துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவிட மாண்பமை நடுவர் மன்றத்தை பணிவுடன் பிரார்த்திக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரர் திரு. வ.பழனிவேலு என்பவர் நாகப்பட்டிணம், உள்ளாட்சி நிதித் தணிக்கை, பொது தகவல் அலுவலர்/மண்டல இணை இயக்குநர், திருச்சிராப்பள்ளி (மற்றும்) உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி இயக்குநர் (பொ) அவர்களிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் இப்பொருள் குறித்து தகவல் கோரியதற்கு, தணிக்கைத்துறை தல ஆய்வு மேற்கொண்டு கீழ்கண்டவாறு தனது ஆய்வறிக்கையினை 02.12.2022 –ல் மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

"24.01.2022 அன்று ஒரே நாளில் இயற்றப்பட்ட 55 தீர்மானங்களில் 15 தீர்மானங்கள் 4 கோடிக்கும் மேல் உள்ள டெண்டர்கள் எனவும் அவற்றில் ஒரே நிறுவனத்திற்கு 2 கோடிக்கு 13 டெண்டர்கள் இறுதி செய்யயப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்ட புகார் குறித்த ஆய்வறிக்கை.

அ) <u>தீர்மானம் 1231/24.01.2022– ன்படி இறுதி செய்யப்பட்ட பணிகள்</u>

தீர்மான எண்.1231/24.01.2022 பொருள்.28–ன்படி கீழ்கண்ட விவரப்படியான 10 பணிகளுக்கான ஒப்பந்த புள்ளியில் 88.47 லட்சம் மதிப்புடைய 6 பணிகளுக்கான (வ.எண். 1, 3, 7, 8, 9 மற்றும் 10) ஒப்பந்த புள்ளி திருவாளர். வெர்சடைல் என்ஜினியரிங் சர்வீசஸ், மயிலாடுதுறை என்ற நிறுவனத்திற்கு இறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி விதிகளின்படி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தபுள்ளி விலை வீதங்கள் ஒப்பு நோக்கப்பட்டு குறைந்த விலை வீதம் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தபுள்ளி இறுதி செய்யப்பட்டது. இந்த விவரங்கள் சரிபார்க்கப்பட்டது.

தீர்மானம் 1231/24.01.2022 பொருள் 17–ன்படி இறுதி செய்யப்பட்ட இணைப்பில் காணும் பணிகளில் வ.எண். 7 ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு M/s. Versatile Engineering Services, Mayiladuthurai மற்றும் ஒப்பந்ததாரர் திரு. சட்டையப்பன், மயிலாடுதுறை ஆகியோரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து வேலையானது M/s. Versatile Engineering Services, Mayiladuthurai நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட அட்டவணைப்படி இப்பணிக்கு திரு. கே. மயில்வாகனன், மயிலாடுதுறை என்பவரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது குறித்த கோப்பு ஆய்வு செய்யப்பட்டது. ஒப்பந்தபுள்ளி விலை விகிதங்கள் ஒப்புநோக்கப்பட்டு குறைந்த விலை வீதம் அளித்த M/s.Versatile Engineering Services, Mayiladuthurai நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்ட விவரம் சரிபார்க்கப்பட்டது.

# இணைப்பு

## (தீர்மானம் 1231/24.01.2022–ன்படியான வேலைகள்)

| வ. எண். | வேலை விபரம் | மதிப்பீடு (லட்சம்) | ஒப்பந்தபுள்ளி அளித்தவர்கள் விவரம் | மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம் | ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்பட்ட நபர்/ நிறுவனம் | பணி முடிவு/ முன்னேற்றம்/ நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 15 வது மத்திய நிதி ஆணையம் 2020–21 (Tide Grant) மற்றும் 2021–22 (UnTide Grant) | | | | | | |
| 1 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.31, மயூரநாதர் தெற்கு மடவிளாகம் மற்றும் வடக்கு மடவிளாகம் சந்து ஆகிய சாலைகளில் தார்சாலை அமைக்கும் பணி | 25.00 | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | ரூ.2286562.59 (+) 4.93 % அதிகம் | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | முடிவு |
| | | | Thiru K.Mayilvaganan, Mayilladuthurai | ரூ.2297779.60 (+) 5.45 % அதிகம் | | |
| 2 | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.27, பார்க் அவென்யூ சாலையில் தார்சாலை அமைக்கும் பணி | 25.00 | Tmt.G. Sasirani, Mayilladuthurai | ரூ.2301481.00 (+) 4.96 % அதிகம் | Thirumathi Sasirani, Mayilladuthurai | நிலுவை |
| | | | S.Seenuvasan, Mayilladuthurai | ரூ.2327940.00 (+) 6.17 % அதிகம் | | |
| 3 | மயிலாடுதுறை நகராட்சி ஆடுவகை கூடத்தை சீரமைக்கும் பணி | 15.12 | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | ரூ.1400766.38 (+) 6.39 % அதிகம் | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | முன்னேற்றம் |
| | | | Thiru K.Mayilvaganan, Mayilladuthurai | ரூ.1420194.00 (+) 6.39 % அதிகம் | | |
| 4 | வார்டு எண். 31 வண்டி பேட்டையில் BOV Charging Shed அமைக்கும் பணி | 9.90 | Thiru G.Uthirapathy, Mayilladuthurai | ரூ.879669.59 (+) 4.97 % அதிகம் | Thiru G.Uthirapathy, Mayilladuthurai | நிலுவை |
| | | | Tmt.Sasirani, Mayilladuthurai | ரூ.885612.34 (+) 5.86 % அதிகம் | | |
| 5 | வார்டு எண். 27 பார்க்அவென்யூ சாலையில் BOV Charging Shed அமைக்கும் பணி | 9.90 | Thiru G.Uthirapathy, Mayilladuthurai | ரூ.879780,50 (+) 4.98 % அதிகம் | Thiru G.Uthirapathy, Mayilladuthurai | நிலுவை |
| | | | Tmt.G. Sasirani, Mayilladuthurai | ரூ.882732.45 (+) 5.34 % அதிகம் | | |
| | | | Tmt.G. Sasirani, Mayilladuthurai | ரூ.889135.19 (+) 6.10 % அதிகம் | | |
| 6 | வார்டு எண். 18 நட்டார தெரு சாலையில் BOV Charging Shed அமைக்கும் பணி | 9.90 | Thiru G.Uthirapathy, Mayilladuthurai | ரூ.879357.19 (+) 4.95 % அதிகம் | Thiru G.Uthirapathy, Mayilladuthurai | நிலுவை |
| | | | Tmt. G.Sasirani, Mayilladuthurai | ரூ.889135.19 (+) 6.10 % அதிகம் | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | மயிலாடுதுறை நகராட்சி விடுபட்ட பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி | 21.00 | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | ரூ.1905590.88 (+) 0.11 % அதிகம் | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | முன்னேற்றம் |
| | | | Thiru K.Mayilvaganan, Mayilladuthurai | ரூ.1984196.00 (+) 4.02 % அதிகம் | | |
| 8 | மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் மேல்நிலை தொட்டி மற்றும் குழாய்களுக்கு தேவையான Sluice Value, double air value வாங்கி பொருத்தும் பணி. | 6.00 | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | ரூ.504062.00 (+) 4.96 % அதிகம் | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | முடிவு |
| | | | Thiru K.Mayilvaganan, Mayilladuthurai | ரூ.511200.00 (+) 6.45 % அதிகம் | | |
| 9 | மயிலாடுதுறை நகராட்சி பராமரிப்பில் உள்ள சித்தர்காடு மாமரத்து மேடை கே.கே.ஆர்.நகர் குடிநீர் மேல்நிலை தொட்டிகளுக்கு 20 HP Submersible Pumpset வாங்கி பொருத்தும் பணி | 1.35 | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | ரூ.117250.00 (+) 4.94 %. அதிகம் | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | முன்னேற்றம் |
| | | | Thiru K.Mayilvaganan, Mayilladuthurai | ரூ.120000.00 (+) 7.40 % அதிகம் | | |
| 10 | கழிவுநீர் உந்து நிலையம் 6.7 முதல் Back Bone Sewer II தரங்கம்பாடி (வண்டிபேட்டை வரை) தற்காலிக பிரதான குழா அமைக்கும் பணி | 20.00 | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | ரூ.1620352.50 (+) 4.76 %. அதிகம் | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | முன்னேற்றம் |
| | | | Thiru K.Mayilvaganan, Mayilladuthurai | ரூ.1627685.60 (+) 5.24 % அதிகம் | | |

**ஆ) தீர்மானம் 1220 / 24.01.2022 இறுதி செய்யப்பட்ட பணிகள்**

தீர்மானம் எண்.1220/24.01.2022 பொருள் 17–ன்படி கீழ்கண்ட விவரப்படியான 8 பணிகளுக்கான ஒப்பந்த புள்ளியில் 144.00 லட்சம் மதிப்புடைய 8 பணிகளுக்கான ஒப்பந்த புள்ளிகளும் திருவாளர் வெர்சடைல் என்ஜினியரிங் சர்வீசஸ் மயிலாடுதுறை என்ற நிறுவனத்திற்கு இறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி விலை வீதங்கள் ஒப்பு நோக்கப்பட்டு குறைந்த விலை வீதம் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தபுள்ளி இறுதி செய்யப்பட்டது. இந்த விவரங்கள் சரிபார்க்கப்பட்டது.

திருவாளர் வெர்சடைல் என்ஜினியரிங் சர்வீசஸ், மயிலாடுதுறை என்ற நிறுவனத்திற்கு அளிக்கப்பட்ட வேலைகள் குறித்த விவரங்கள்.

| வ.எண். | தீர்மானம் எண்./நாள் | பணிகள் | மதிப்பு (லட்சம்) |
|---|---|---|---|
| 1 | 1231/24.01.2022 | 6 | 88.47 |
| 2 | 1220/24.01.2022 | 8 | 144.00 |
| மொத்தம் | | 14 | 232.47 |

# இணைப்பு

## (தீர்மானம் 1220/24.01.2022 ன்படியான வேலைகள்)

| வ. எண். | வேலை விபரம் | மதிப்பீடு (லட்சம்) | ஒப்பந்தபுள்ளி அளித்தவர்கள் விவரம் | மதிப்பீட்டை விட குறைவு/ மதிப்பீட்டை விட அதிகம் | ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்பட்ட நபர்/ நிறுவனம் | பணி முடிவு/ முன்னேற்றம்/ நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 15 வது மத்திய நிதி குழு (Tied Grant) 2021–22 | | | | | | |
| 1 | வார்டு எண்.7 திம்மநாயக்கன் படித்துறையில் Resource Recovery | 20.00 | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | ரூ.1739786.23 (–) 0.16 % குறைவு. | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | நிலுவை |
| | | | Thiru K.Mayilvaganan, Mayilladuthurai | ரூ.1794790.84 (+) 3.00 % அதிகம் | | |
| 2 | பாதாள சாக்கடை பராமரிப்பு பணிக்காக 20 HP ஒரு எண்ணிக்கை (கழிவு நீர் உந்து நிலையம் எண்.2) மற்றும் 4 HP ஒரு எண்ணிக்கை (சீர்காழி ரோடு) Sewage Nonclog Motor வாங்கும் பணி. | 22.00 | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | ரூ.1733000.00 (–) 0.13 % குறைவு | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | முடிவு |
| | | | Thiru K.Mayilvaganan, Mayilladuthurai | ரூ.1750000.00 (+) 0.85 % அதிகம் | | |
| 3 | பாதாள சாக்கடை பராமரிப்பு பணிக்காக 4 HP ஒரு எண்ணிக்கை (பூம்புகார் ரோடு கல்லணை ரோடு) Sewage Non clog Motor வாங்கும் பணி. | 10.00 | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | ரூ.830000.00 (–) 0.48 % குறைவு | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | முடிவு |
| | | | Thiru K.Mayilvaganan, Mayilladuthurai | ரூ.850000.00 (+) 1.92 % அதிகம் | | |
| 4 | பாதாள சாக்கடை பராமரிப்பு பணிக்காக 4 HP ஒரு எண்ணிக்கை (தரங்கம்பாடி ரோடு, மற்றும் ஜெனிபர் ஸ்வீட்) மற்றும் 2HP ஒரு எண்ணிக்கை (சந்திரிகுளம் Lifting Station) Sewage Non clog Motor வாங்கும் பணி. | 20.00 | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | ரூ.1515000.00 (–) 00.16 % குறைவு | | முடிவு |
| | | | Thiru K.Mayilvaganan, Mayilladuthurai | ரூ.1575000.00 (+) 3.79 % அதிகம் | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | முடிகண்டநல்லூார் தலைமை நீரேற்று நிலையத்திற்கு 250 KVA ஜெனரேட்டர் (Auto Manual Failure) பேனல் வாங்கும் பணி | 21.50 | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | ரூ.1765000.00 (-) 0.11% குறைவு | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | முடிவு |
| | | | Thiru K.Mayilvaganan, Mayilladuthurai | ரூ.1800000.00 (+) 1.87% அதிகம் | | |
| | | | M/s. MADRAS POWER CORPORATION, CHENNAI | ரூ.2041200.00 (+) 15.52% அதிகம் | | |
| | | | CHENNAI DIESEL PVT. LTD, Chennai-600 076 | ரூ.2139250.00 (+) 21.07% அதிகம் | | |
| | | | M/s. SPAIN ELECTRNOTICS DELHI-110 095 | ரூ.1767000.00 மதிப்பீட்டு அளவு | | |
| | | | R.V. Electricals. Coimbatore | ரூ.2126000.00 (+) 20.32% அதிகம் | | |
| 6 | வார்டு எண்.1 கே.கே,ஆர் நகரில் போர்வெல் அமைக்கும் பணி | 9.90 | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | ரூ.852835.00 (-) 0.03% குறைவு | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | முடிவு |
| | | | Thiru K.Mayilvaganan, Mayilladuthurai | ரூ.855257.00 (+) 0.26% அதிகம் | | |
| 7 | முடிகண்டநல்லூார் தலைமை நீரேற்று நிலையத்தில் ஜெனரேட்டர் அறை (Generator Shed) அமைக்கும்பணி. | 18.50 | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | ரூ.1573813.89 (-) 0.32% குறைவு | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | நிலுவை |
| | | | Thiru K.Mayilvaganan, Mayilladuthurai | ரூ.1653118.78 (+) 4.71% அதிகம் | | |
| | | | M/s. MADRAS POWER CORPORATION, CHENNAI | ரூ.271463.39 (+) 17.19% அதிகம் | | |
| | | | CHENNAI DIESEL PVT. LTD, Chennai-600 076 | ரூ.1840750.00 (+) 16.59% அதிகம் | | |
| 8 | வண்டிப்பேட்டை முதல் மாந்தோப்பு தெருவரை குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி | 22.10 | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | ரூ.1905590.88 (-) 0.11% குறைவு | M/s. Versatile Engineering Services, Mayiladuthurai | நிலுவை |
| | | | Thiru K.Mayilvaganan, Mayilladuthurai | ரூ.1984196.00 (+) 4.02% அதிகம் | | |

**2. மூன்று கோடி அளவிற்கு ஒரே ஆண்டில் பாதாள சாக்கடை திட்டத்திற்கு செலவு செய்யப்பட்டதாக குறிப்பிடபட்ட புகார் குறித்து ஆய்வறிக்கை.**

நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறை ஆணை ந.க.எண்.10568/2019/E1, நாள் 03.02.2020–ன்படி கீழ்கண்ட விவரப்படியான பணிக்கு ரூ.275 லட்சத்தில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையராக முதன்மை தலைமை பொறியாளரின் செயல்முறை ஆணை ந.க.எண்.26/2020/002 நாள் 26.02.2020– ன்படி கீழ்கண்ட விவரப்படியான பணிக்கு ரூ.275 லட்சத்தில் பணி மேற்கொள்ள தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் வேலை உத்தரவு ஆணை ந.க. எண். 7724/99/E1, நாள் 28.09.2020 –ன்படி இப்பணியானது திருவாளர் வெர்சடைல் என்ஜினியரிங் சர்வீசஸ் மயிலாடுதுறைக்கு ஒப்படைக்கப்பட்டு வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி விதிகளின்படி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தபுள்ளி விலை வீதங்கள் ஒப்பு நோக்கப்பட்டு குறைந்த விலை வீதம் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தபுள்ளி இறுதி செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. இப்பணியானது 25.01.2021 ல் தொடங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைக்கான முடிவறிக்கை பெறப்படவில்லை.

மேலும் கீழ்கண்ட விவரப்படியான பணி, பாதாள சாக்கடை பராமரிப்புகள் தொடர்பான பணி அல்ல என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வ. எண். | திட்டம் | நிதி ஆதாரம் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 1 | Capital Grant Fund and O & M Gap Filling Fund 2019-2020 | CGF 19-20 – 100.00 லட்சம்<br>CGF 19-20 – 170.00 லட்சம்<br>நகராட்சி பங்கு – 5.00 லட்சம்<br>---------<br>275.00 லட்சம்<br>------------ | கழிவுநீர் உந்து நிலையம் –4 (PS-IV) முதல் கழிவுநீர் உந்துநிலையம்-8 (PS-VIII) வரை கழிவுநீர் உந்து குழாய் அமைக்கும் பணி (2.195 கி.மீ) | 275. லட்சங்கள் |

3. மகளிர் சுய உதவி குழுவில் உள்ள 15 பணியாளர்களுக்கு ஆறு மாத காலத்திற்கு ரூபாய் 50 லட்சம் தினக்கூலி வழங்க தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக குறிப்பிடப்பட்ட புகார் குறித்த ஆய்வறிக்கை. மன்ற தீர்மான எண்.1158, நாள் 18.10.2021–ன்படி கூடுதலாக 15 டெங்கு பணியாளர்கள் ஆறு மாதங்களுக்கு (01.11.2021 முதல் 30.04.2022 வரை) பணிபுரிய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 12/2021–ல் பணிபுரிந்தமைக்கு ஒரு மாதத்திற்கு மட்டும் BPV No. 415/ 12.01.2022–ன் வழி தொகை ரூ.118440 செலவிடப்பட்டடுள்ளது.

மன்ற தீர்மான எண்.1077, நாள் 30.06.2021–ன் படி 15.06.2021 முதல் 14.07.2021 வரை 30 நாட்களுக்கு பொது சுகாதார பணி மேற்கொண்டமைக்கு BPV No.267/13.10.2021–ன் வழி தொகை ரூ.171360/– வளரும் நிலா சுய உதவிக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விவரங்கள் சரிபார்க்கப்பட்டது.

மேலும் இச்செலவினங்களுக்கான வருகை (NMR) சரிபார்க்கப்பட்டது.

| மயிலாடுதுறை நகராட்சி | | | | | |
|---|---|---|---|---|---|
| மகளிர் சுய உதவிக் குழுவுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினம் | | | | | |
| வ. எண். | BPV No./Date | திட்டம் | மாதம் | தொகை வழங்கப்பட்ட சுய உதவி குழு விவரம் | தொகை ரூ. |
| 1 | 267/13.10.2021 | RF(P) | 15.06.2021 to 14.07.2021 | வளரும் நிலா | 171360 |
| 2 | 415/12.01.2022 | RF(P) | 12/2021 | வளரும் நிலா (கூடுதலாக 15 நபர்கள் | 118440 |
| | கூடுதல் | | | | 289800 |

– என தணிக்கை ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 08.052023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

4) மயிலாடுதுறை நகராட்சி ஆணையாளர் தனது 25.07.2023 நாளிட்ட கடிதத்தில் தனது அறிக்கையினை கீழ்க்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரரால் மயிலாடுதுறை நகராட்சியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் விதிமீறல்கள் மற்றும் முறைகேடுகள் நடைபெற்றதாக தெரிவித்துள்ளார். மனுதாரர் தெரிவித்துள்ளது முற்றிலும் உண்மைக்கு முரணானது. மேலும், நகராட்சியில் நடைபெற்ற அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளி ஒப்புநோக்கப்பட்டு குறைந்தவிலை விகிதம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மேற்படி பணிகள் யாவும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது. இதில் எவ்விதமான முறைகேடுகளும், விதிமீறல்களும், ஏதும் நடைபெறவில்லை. மேலும், மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளின் ஒப்பந்தப்புள்ளி விதிமீறல்கள் ஏதும் உள்ளனவா என உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் மறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் ஒப்பந்தப்புள்ளி கோப்புகளை ஆய்வு செய்த உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் யாவும் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்த விலைவிகிதம் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டது என அறிக்கை வழங்கியுள்ளது.

எனவே மேற்கண்டபடி மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள உண்மைக்கு முரணான பொய் புகாரினை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் ஆகியோரை 12.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு 28.08.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. பின்னர் மேற்படி விசாரணை 13.09.2024 அன்று நடைபெறும் என இம்முறைமன்ற நடுவ 02.09.2024 நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரருக்கும், மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கும் தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் தனது 13.09.2024 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் 13.09.2024 அன்று முக்கிய நிகழ்ச்சி உள்ளதாக தெரிவித்து, மற்றொரு தேதிக்கு விசாரணையை மாற்றி வைக்குமாறு கேடடுக்கொண்டதைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவத்தின் 10.09.2024 நாளிட்ட கடிதம் மூலம் 03.10.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவுள்ள நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கும் தெரிவிக்கப்பட்டது.

6) மனுதாரர் திரு.V.பழனிவேலு 03.10.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்:

“நடுவர் முறைமன்ற நடுவர் முன்பாக இன்று 03.10.2024 நேரில் ஆஜராகி கோரிய விளக்கத்திற்கு என்னால் பணிந்து அளிக்கப்பட்ட பதிலுறையினை கீழ்க்கண்டவாறு எழுத்துபூர்வமாக அளிக்கின்றேன். 24.01.2022 அன்று நகர்மன்றத்தில் மயிலாடுதுறை நகராட்சியில் 57 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 57 தீர்மானங்களில் 24 தீர்மானங்கள் பணி ஒப்பந்தங்கள் ஆகும். மாலை 5 மணி முதல் 12 மணிக்குள் நகர்மன்றத்தில் தீர்மானங்கள் செயல்வடிவம் பெற்றதாக அறியப்பட்டேன். அதில் ஏற்பட்ட முறைகேடுகள் என்னால் 22.11.2022–ல் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு சென்னை–9க்கும் Director of Vigilance and Anti Corruption No.293, MKN ரோடு, ஆலந்தூருக்கும் பதிவு தபால் மூலம் தெரிவித்துள்ளேன். சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.13481/29.10.2011–ன்படி விதிமீறல்களுக்காக மேற்கண்ட ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட வேண்டியுள்ளது.

1) முறையான விளம்பரமில்லை.
2) தீர்மான எண்.1238/22–ன்படி பாதாளசாக்கடை பணி, வேறு ஒரு தனி நபருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இரட்டிப்பு செலவாகும்.
3) தீர்மானத்தில், ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மிகப்பெரிய முறைகேடாகும்.
4) போலி சொத்து மதிப்பு சான்று அடிப்படையில் தீர்மான எண்.1231–ல் வேலை வழங்கப்பட்டுள்ளது.

எனவே மிகப்பெரிய அளவில் 24.01.2022–ல் தனி அலுவலர் தானே சுய லாபத்திற்கு தேர்தல் அறிக்கை வெளியிட இருப்பது தெரிந்தும், முறைகேடாக ஒரே இரவில் நடைபெற்றுள்ளது.

வேண்டுதல்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அல்லது குற்றப்பிரிவு காவல்துறையின் விசாரணை உத்தரவிட வேண்டப்படுகிறது” என தெரிவித்துள்ளார்.

6) நகராட்சி ஆணையாளர் சார்பாக மயிலாடுதுறை நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் சீ. சுரேஷ் என்பவர் 03.10.2024 அன்றைய நேரடிய விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“வாதியால் மயிலாடுதுறை நகராட்சியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் விதிமீறல்கள் மற்றும் முறைகேடுகள் நடைபெற்றதாக தெரிவித்துள்ளார். வாதி தெரிவித்துள்ளது முற்றிலும் உண்மைக்கு முரணானது. மேலும், நகராட்சியில் அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும் ஒளிவு மறைவற்ற Tamil Nadu Transparency in Tenders Act மற்றும் Rules–ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளி ஒப்புநோக்கப்பட்டு குறைந்தவிலை விகிதம் வழங்கியுள்ள ஒபபந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மேற்படி பணிகள் அனைத்தும் on line tender என்பதால் 24 மணி நேரத்திற்குள் இறுதி செய்யப்பட்டது. இது தொடர்பாக ஒப்பந்த விதிமீறல்கள் ஏதும் உள்ளனவா என உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் மறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் ஒப்பந்தப்புள்ளி கோப்புகளை ஆய்வு செய்த உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் யாவும் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலை விகிதம் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டது என அறிக்கை வழங்கியுள்ளது. எனவே மேற்கண்ட வாதியால்

தெரிவிக்கப்பட்டுள்ள உண்மைக்கு முரணான பொய் புகாரினை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார், மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரரின் வாக்குமூலம், மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சியில் பணிபுரியும் இளநிலை உதவியாளரின் வாக்குமூலம், நாகப்பட்டினம் உள்ளாட்சித் நிதித்தணிக்கை உதவி இயக்குனரின் அறிக்கை மற்றும் இதர ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மயிலாடுதுறை நகராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை பரிசீலனை செய்ததில் கடந்த 24.01.2022 அன்று நகர்மன்றத்தில் 57 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன எனவும், மேற்படி 57 தீர்மானங்கள் ஒரே நாளில் பிற்பகல் 05.00 மணிக்கு துவங்கிய மன்றக் கூட்டம் இரவு 12.00 மணிக்குள் அதே தேதியில் 24 பணி ஒப்பந்தங்கள் முறைகேடாக ஏற்கப்பட்டுள்ளது என தெரிவித்து ஒப்பந்த நடைமுறைகளை பின்பற்றாமல் வேலை உத்திரவு வழங்கியது குறித்து விசாரணை மேற்கொள்ள கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் இது குறித்து விரிவான புகார் மனுவினை தமிழ்நாடு அரசு தலைமைச்செயலாளர் அவர்களுக்கும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநருக்கும், தமிழ்நாடு மாநில தேர்தல் அலுவலருக்கும் அனுப்பப்பட்டதாகவும், தலைமைச்செயலாளர் அவர்கள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை எனவும், மாநில தேர்தல் ஆணையம் கடிதம் எண்.9507/ந.தே.1/2022 நாள்.29.11.2022–ல் புகார் மனுவினை நகராட்சியின் நிர்வாக இயக்குநருக்கு அனுப்பி வைத்துள்ள நிலையில் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை, துணைக் கண்காணிப்பாளரின் கடிதம் எண். 146097/2022 நாள் 05.12.2022–ல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் மன்றத்தில் புகார் செய்து கொள்ளலாம் என்று தெரிவித்து புகாரை திரும்ப அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவித்து மனுதாரரின் புகார் மனுவின் வாயிலாக அறியவருகிறது.

மனுதாரார் இணை இயக்குனர் அவர்களிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் இப்பொருள் குறித்து தகவல் கோரியதற்கு, தணிக்கைத் துறை தனது ஆய்வறிக்கையினை 02.12.2022 நாளிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு விரிவான அறிக்கையினை அளித்துள்ளார். மேற்படி அறிக்கையில் இந்நிகழ்வில் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி விலை வீதங்கள் ஒப்பு நோக்கப்பட்டு குறைந்த விலை வீதம் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தபுள்ளி இறுதி செய்யப்பட்டது எனவும், விவரங்கள் சரிபார்க்கப்பட்டது எனவும் உள்ளாட்சி தணிக்கை துறையால் மனுதாரர்க்கு தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் அறியவருகிறது.

மேலும், ஒப்பந்தப்புள்ளி பணிகள் அனைத்தும் on line tender என்பதால் 24 மணி நேரத்திற்குள் இறுதி செய்யப்பட்டுள்ளதாக மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் சார்பாக கலந்து கொண்ட நகராட்சி இளநிலை உதவியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது. மனுதாரரின் புகார் மனு குறித்து உள்ளாட்சி தணிக்கை துறையால் ஆய்வு செய்து மனுதாரர்க்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஆய்வறிக்கையில், ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி விலை வீதங்கள் ஒப்பு நோக்கப்பட்டு குறைந்த விலை வீதம் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தபுள்ளி இறுதி செய்யப்பட்டது எனவும், விவரங்கள் சரிபார்க்கப்பட்டது என்ற விவரம் தணிக்கை துறை மூலம் மனுதாரர்க்கு தெரிவித்துள்ள கடிதத்தின் வாயிலாக அறியமுடிகிறது.

இந்நேர்வில், மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன் படி ஒப்பந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதா எனவும், மின்னனு முறையில் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதா,

குறிப்பிட்ட காலக்கெடு வழங்கப்பட்டு, இறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும், இதனில் விதிமீறல்கள் ஏதேனும் நடைபெற்றுள்ளதா என்பதையும், தஞ்சாவூர் நகராட்சி மண்டல இயக்குநர் தலைமையில் ஒரு குழு அமைத்து இப்பொருள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அது குறித்த அறிக்கையின் அடிப்படையில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களை கேட்டுக்கொள்ளலாம் என இம்முறைமன்றம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 29–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.V.பழனிவேலு,
கதவு எண்.48, திருமஞ்சனவீதி,
கொறநாடு, மயிலாடுதுறை – 609001,
மயிலாடுதுறை மாவட்டம்,

2) நகராட்சி ஆணையர்,
மயிலாடுதுறை நகராட்சி,
மயிலாடுதுறை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம்
சென்னை–600 032

30/4/25
செயலாளர்.

7/8